அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 14/2022(III)

எனது இலக்கம் : EST-6/03/LEA/3162(4)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2023.07.13

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>சேவைமூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு / வெளிநாட்டு சம்பளமற்ற லீவு வழங்குதல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2022.06.22 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 14/2022, 2022.09.06 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 14/2022(I), மற்றும் 2022.09.15 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 14/2022(II) இன் பால் தங்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

02. மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி 2023.07.11 ஆந் திகதியிலிருந்து சம்பளமற்ற உள்நாட்டு/வெளிநாட்டு லீவு அனுமதிக்கப்படும் உத்தியோகத்தர்களின் சம்பளமற்ற லீவுக் காலப்பகுதியை சேவை மூப்புக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளாதிருக்க 2023.07.10 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

03. அதற்கமைய, 2023.07.10 ஆந் திகதி வரை சம்பளமற்ற உள்நாட்டு/ வெளிநாட்டு லீவுக்கான அனுமதியைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் 2022.06.22 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 14/2022 இன் 4 ஆம் பந்தியின் 'ஐ' பிரிவு மற்றும் 2022.09.15 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 14/2022(II) இன் 4.10ஆம் பிரிவு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி 2023.07.11 ஆந் திகதி முதல் உள்நாட்டு/ வெளிநாட்டு சம்பளமற்ற லீவினைப் பெற்ற ஒரு உத்தியோகத்தர் அந்த லீவு காலம் முடிவடைந்து மீள சேவைக்கு அறிக்கையிட்டதன் பின்னர் அவரின் சேவை மூப்பு அவர் மேற்படி சுற்றறிக்கையின் படி உள்நாட்டு/வெளிநாட்டு சம்பளமற்ற லீவினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் இருந்த சேவை மூப்பாக அமையும்.

04. இந்த சுற்றறிக்கை அறிவுறுத்தலை மாகாண அரசாங்க சேவைகளில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தேவையான நடைமுறை ஒழுங்குகளை கௌரவ ஆளுநரின் ஆலோசனை மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாகாண பிரதம செயலாளர்களினால் அறிமுகப்படுத்தப்படும்.

05. அரசாங்க நிதியத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் அரச தொழில் முயற்சி உத்தியோகத்தர்களுக்கு இவ்வேற்பாடுகளை ஏற்புடையதாக்கிக் கொள்வது தொடர்பிலான ஆலோசனைகள் நிதி அமைச்சினால் வெளியிடப்படும்.

06. இந்த ஏற்பாடுகளின் கீழ் வெளிநாட்டு சம்பளமற்ற லீவினைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்கள் இத்துடன் இணைப்பு 01 ஆக காட்டப்பட்டுள்ள லீவினை அனுமதிக்கும் அதிகாரியுடன் ஒப்பந்தத்தில் ஈடுபடல் வேண்டும்.

ஒப்பம்./கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-699399
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk

**ஒப்பந்தப் பத்திரம்**

**ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு சம்பளமற்ற லீவுகளை வழங்குதல்.**

இங்கு கீழே "முதலாம் தரப்பினர்" என அழைக்கப்படுவது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ......................................................... (அமைச்சின் பெயர்) செயலாளர் .................................................. (பெயர்) மற்றும் இதன்பிறகு …………………………….(அமைச்சின் பெயர்) செயலாளர் என அழைக்கப்படும் நபர் ஒரு தரப்பினராகவும்,

இங்கு "இரண்டாம் தரப்பினர்" ஆக அழைக்கப்படுவது கீழே பெயர் குறிப்பிடப்படும் பின்வரும் நபர்கள் / உத்தியோகத்தர் மற்ற தரப்பினருக்கு கட்டுப்பட்டு இரு தரப்பினருக்கும் இடையிலான ...........................ஆண்டு .......................... மாதம் .............................. ஆந் திகதி ............................................. என்ற இடத்தில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தப் பத்திரமாகும்.

மேற்கூறிய முதலாம் தரப்பினரால், மேற்கூறிய இரண்டாம் தரப்பினரான ...................................................................................(உத்தியோகத்தரின் நிரந்தர முகவரி) இல் வதியும் ............................................(அமைச்சு / திணைக்களம்) இல் .................................................... எனும் பதவியை வகிக்கும் .........................................................(உத்தியோகத்தரின் முழுப் பெயர்) என்பவருக்கு பின்வரும் நிபந்தனைகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்பட்டு அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான ஓய்வூதியத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வெளிநாட்டு சம்பளமற்ற லீவுகளைப் பெற அனுமதியளிக்கப்படும்.

அந்நிபந்தனைகள் மற்றும் கடப்பாடுகள் யாதெனில்,

01) உத்தியோகத்தர் சம்பளமற்ற வெளிநாட்டு லீவிற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளும் போது உரிய நடைமுறையைப் பின்பற்றுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

02) உத்தியோகத்தரினால் பெறப்படும் மேற்கூறப்பட்ட வெளிநாட்டு லீவுக் காலம் (.......................) ஆந் திகதி முதல் (.........................) ஆந் திகதி வரையாகும் என்பதோடு, அந்த லீவுக் காலம் அதிகபட்சம் (01/05)* வருடத்துக்கு வரையறுக்கப்படல் வேண்டும்.(பெறப்படும் சம்பளமற்ற லீவுக் காலம், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 14/2022 இன் 03 ஆம் பந்திக்கமைய அதிகபட்சம் 01 வருடத்திற்கும், அதன் 02 ஆம் பந்திக்கமைய அதிகபட்சம் 05 வருடங்களுக்கும் வரையறுக்கப்படல் வேண்டும்.)

* ஏற்புடையதற்ற சொல்லை நீக்கவும்

03)உத்தியோகத்தர் வெளிநாட்டு லீவிற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளும் போது மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கிய ....................ஆந் திகதி மற்றும் இலக்கம் .................... உடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை அவ்வாறே தேவைக்கேற்ப பின்பற்றப்படுவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

04)மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை முழுமைப்படுத்துவதற்கு தவறும்பட்சத்தில் உத்தியோகத்தரின் ஓய்வூதிய உரித்துடமையை இழக்க நேரிடும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கடப்பாடுளை மீறுவது குற்றமாகும் என்பதோடு, அவ்வாறான நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் எடுக்கப்படும் எந்தவொரு ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கும் உத்தியோகத்தர் கட்டுப்பட்டவராவார்.

அதற்குச் சாட்சியாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் தரப்பினர் ..........................................................அமைச்சின் செயலாளர்.........................................................(பெயர்) மற்றும் இரண்டாம் தரப்பினர் .............................................. (உத்தியோகத்தரின் முழுப் பெயர்) என்ற இரு தரப்பினராலும் ....................ஆம் ஆண்டு ....................ஆம் மாதம் ...............ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

1) முதலாம் தரப்பினர் ............................... (ஒப்பம்)
.............................. (தே.அ.அ.இலக்கம்)
.............................. (உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

2) இரண்டாம் தரப்பினர் ................................ (ஒப்பம்)
................................ (தே.அ.அ.இலக்கம்)

சாட்சிகள்

1) ...............................................(கையொப்பம்)
...........................(பெயர்) ...........................(தே.அ.அ.இலக்கம்)
...........................(முகவரி)

2) ...........................(கையொப்பம்)
...........................(பெயர்) ...........................(தே.அ.அ.இலக்கம்)
...........................(முகவரி)